17th July 1962] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

வாகவும்,—இப்போது மூன்ருவது ஸ்டேஜுக்குப் போகிறவர்கள் 13 பைசா கொடுப்பார்கள், நான்காவது ஸ்டேஜுக்குப் போகிறவர்கள் 16 பைசா கொடுப்பார்கள், ஐந்து, ஆருவது ஸ்டேஜுக்கு மேல் போகிறவர்கள் இப்போது 30 பைசா, 35 பைசா கொடுக்கிருர்கள்—அதற்கு மேல், "மாக்சிமம்" ஆக 25 பைசாவாகவும் வைக்கலாம் என்பது திட்டம். இந்தத் திட்டத்தை நாம் உருவாக்கியிருக்கும் முறையில் "லாங் டிஸ்டன்ஸ் பாஸஞ்சர்"களுக்கு லாபம், "ஷார்ட் டிஸ்டன்ஸ் பாசஞ்சர்"களுக்கு நஷ்டம். சர்க்கார் இந்தத் திட்டத்தைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : இந்த யோசனையின் காரணமாக, டிக்கட் கட்டணத்தை மாற்றியமைப்பதன் காரணமாக நஷ்டம் ஏற்படுமா ? அல்லது லாபம் கிடைக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மொத்தத்தில் வருமானம் குறைந்து விடும். லாங் டிஸ்டன்ஸ் பாசஞ்சர்கள் 31 பைசா கொடுப்பவர்கள், 25 பைசாதான் கொடுப்பார்கள். மொத்தத்தில் வருமானம் குறையும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : என்.ஜி.ஓ.-க்கள் அலுவலகங்களுக்குப் போய்வர-மலிவான கட்டணம் வசூலிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த வருஷத்தில் 10 ரூட்டு களுக்கு சீசன் டிக்கட் கொடுத்திருக்கிறோம். 30 நாட்களுக்கு போய் வருவதற்கான கட்டணத்தில் 80 சதவிகிதந்தான் வசூல் செய்து வரு கிறோம். அதுதான் இப்போது இருக்கக் கூடிய வசதி.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRIVILEGE MATTER REGARDING A PUBLICATION IN THE 'JANASAKTHI', DATED 17TH JULY 1962.

MR. SPEAKER : Sri S. Madhavan, M.L.A. has given notice of a matter of privilege regarding the publication in the Tamil Daily the 'Janasakthi', dated 17th July 1962 relating to the matter of privilege dealt with yesterday in the House regarding 'Murasoli'. I am examining the question and it will be taken up on the 21st July.

III.—CALLING ATTENTION TO THE DIFFICULTIES IN ADMISSION TO HIGH SCHOOLS AND THE PRE-UNIVERSITY COURSE.

MR. SPEAKER : Sri M. Kalyanasundaram, Sri V. Krishnamoorthy and Pulavar K. Govindan have given notice of their intention to call the attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, viz., hardship of students in getting admission in High Schools and Pre-University course in colleges. Sri M. Kalyanasundaram will now speak.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், கல்வி மான்யத்தன்று இந்தப் பிரச்னை வந்திருக்கிற காரணத்தால் நான் அதிக நேரம் பேச வேண்டிய அவசியம் இல்லை. இந்த நோடீஸ் கொடுத்து ரொம்ப நாள் ஆகிறது. பள்ளிக்கூடங்களில் இடம் கிடைக்காமல் பெற்றோர்கள் கஷ்டப்பட்ட காலத்தில்